

...ட்பாளர் ஜெயவர்தனை ஆதரித்து சரத்குமார் திருவான்மியூர்

## ...நக்கு அழகா முக்கியம்?

# ...கு சேவை செய்யும் தான் முக்கியம்!

## பேச்சு!!

நாற்பதும் நமதே என்ற கொள்கையுடன் ஒரு சிறந்த கூட்டணி அமைத்துஉள்ளதேமுதல்வருக்கு கிடைத்த முதல் வெற்றி என்று நினைக்கிறேன். சந்தர்ப்பவாத கூட்டணி தி.மு.க.வில் தான் உள்ளது. ஈழத்தமிழர் பிரச்சினையில் வைகோ, தி.மு.க.வை எப்படியெல்லாம் பேசினார் என்பது அனைவருக்கும் தெரியும். புல்வாமாதாக்குதலுக்கு பிறகு ஒரு வலிமையான ஆட்சி மத்தியில் இருக்க வேண்டும். ராகுல்காந்தி பிரதமர், வேட்பாளர் என்று தி.மு.க. தலைவர் மட்டும் தான் சொல்கிறார். வேறு யாரும் சொல்லவில்லை.

சிலர் சொல்கிறார்கள் அழகான வேட்பாளர்கள் என்று. வேட்பாளருக்கு அழகு முக்கியமில்லை. மக்களுக்கு சேவை செய்யும் பண்பு தான் முக்கியம். அழகை வைத்து வாக்கு சேகரிக்காமல் வேட்பாளர் அழகோடு சேர்ந்து பண்பும், திறமையும்கொண்டுள்ளதால் ஜெயவர்தனுக்கு நாங்கள் இன்று வாக்கு சேகரிக்க வந்துள்ளோம்.

ஜெயவர்தன் என்று சொன்னால் அம்மாவின் பெயரை கொண்டனர். ஜெ.ஜெ என்ற பெயர்தான் ஜெயவர்தன், ஜெயக்குமார் என்பவர்.வெற்றி என்ற பெயருடன் துவங்குகின்றனபயணம் நிச்சயம் வெற்றியடையும். ஜெயலலிதா இல்லாத தேர்தலை சந்திப்பது வருத்தமாக தான் உள்ளது. அவர் விட்டு சென்ற பணிகளை சிறப்பாக செய்து வருகின்ற எடப்பாடி பழனிசாமியை போற்ற கடமைப்பட்டுள்ளேன். பழமொழியை மாற்றி மாற்றி பேசிக்கொண்டிருக்கும் ஸ்டாலின், எங்கள் கூட்டணியை சந்தர்ப்பவாத கூட்டணி என்று கூறுகிறார். உங்கள் கூட்டணி தான் சந்தர்ப்பவாத கூட்டணி.

இவ்வாறு அவர் பேசினார்.

## ...னி தொகுதியில்

# ...பிகா கங்கிய வீட்டை

# வேட்பாளர்கள்-முகவர்களுடன் கோவை கலெக்டர் ஆலோசனை!

கோவை, மார்ச்.30–

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான ராசாமணி, கோவை நாடாளுமன்ற தொகுதி பொது பார்வையாளர் ரேணுஜெய்பால் ஆகியோர் கோவைநாடாளுமன்ற தொகுதி வேட்பாளர்கள்மற்றும்முகவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று கோவைநாடாளுமன்ற தொகுதி வேட்பாளர்கள், முகவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான ராசாமணி, கோவை நாடாளுமன்ற தொகுதி பொது பார்வையாளர்ரேணு ஜெய்பால் ஆகியோர் கலந்து கொண்டு வேட்பாளர்கள்,முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்பாண்டியராஜன், மாநகர காவல் துணை ஆணையர்சரவணன் பாலாஜி, உதவி ஆட்சியர் (பயிற்சி) சினேகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (தேர்தல) நாராயணன், (கணக்குகள்) சேஷாத்ரி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்பிரபாகரன், முருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சர்வலக்ஷ்மி பேப்பர் லிமிடெட் (SPL)-க்கு சீரமைப்பு அல்லது சமரச திட்டத்தை வழங்குதல் தொடர்பான விருப்ப வரவேற்பு**
(மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட மேல் முறையீட்டு தீர்ப்பாயம் உத்தரவு அடிப்படையில்)

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 230-ன் கீழ் விருப்பமுள்ள நபர் அல்லது நபர்களிடமிருந்து சர்வலக்ஷ்மி பேப்பர் லிமிடெட் (SPL) நிறுவனத்திற்கான சீரமைப்பு அல்லது சமரச திட்டம் தொடர்பான விருப்பம் வரவேற்கப்படுகிறது. SPL நிறுவனம், செய்தித்தாள் காகிதம், நகல் காகிதம், எழுதும் மற்றும் அச்சிடும் காகிதம் மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட காகித அட்டைகள் மற்றும் காகித கூழ் தயாரிப்பு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தது.

மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச் (NCLT) 24.04.2018 தேதியிட்ட உத்தரவுப்படி, நொடித்தல் மற்றும் திவால் சட்ட தொகுப்பு 2016-ன் கீழ், SPL நிறுவனம் தற்போது கலைப்பு நடைமுறையில் உள்ளது.

மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச் கலைப்பாளராக நியமித்துள்ள திரு. எஸ். தனபால், மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட மேல் முறையீட்டு தீர்ப்பாயம் (NCLAT), புதுடெல்லி, 27.02.2019 அன்று உத்தரவிட்டதற்கிணங்க, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 230-ன் கீழ் விருப்பமுள்ள நபர்களிடம் இருந்து சீரமைப்பு அல்லது சமரச திட்டம் தொடர்பான விருப்ப கருத்துருவை இதன் மூலம் வரவேற்கிறார்.

விருப்பமுள்ள நபர்கள் விருப்ப கருத்துருவுடன் கண்டிப்பாக ஆதரவு ஆவணத்தை கம்பெனியின் இணையதளம் www.servalakshmi.co.inல் வெளியிடப்பட்டுள்ள தகவல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள முறையில் சமர்ப்பிக்க வேண்டும். ஆய்வு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கு csdhanapal.ibc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

ஒப்பம்/-
S. தனபால்
சர்வலக்ஷ்மி பேப்பர் லிமிடெட்டின் (கலைப்பில் உள்ள) கலைப்பாளர்
Reg No- IBBI/IPA-002/IP-N00060/2017- 18/10112

தேதி : 29.03.2019
இடம் : திருநெல்வேலி

**ஆந்திரா வங்கி**
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
சுந்தராபுரம் கிளை, A2- குறிச்சி ஹவுசிங் யுனிட் பேஸ்-1, சிட்கோ போஸ்ட் மதுக்கரை ரோடு, காமராஜ் நகர், சுந்தராபுரம், கோவை-641021.

**தங்க நகை ஏல அறிவிப்பு**

எங்களது வங்கியில் நகைக்கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட கடன்தாரர்கள் கடன் தொகையானது, தவணை கடந்து நெடுநாட்களாகியும் கடன் தொகையினை செலுத்தி நகைகளை திரும்பப்பெறவில்லை. கடன்தாரருக்கு நகையை திருப்புவதற்கு பலமுறை நினைவூட்டியும் கடன்தொகை திரும்ப செலுத்தாமல் நிலுவையில் உள்ளது. எனவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து 01.04.2019 அன்று மதியம் 12.00 மணிக்குள் திருப்பிவிட வேண்டும். தவறினால் கடனிற்கு ஈடாக